ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்

எழுதிய நூல்களின் வரிசையிலே....

# “விநாயகர், பிள்ளையார், கணபதி”
# - ஆய்வுக் கட்டுரைகள்







## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியவை.

# கணபதி சதுர்த்தி வெளியீடு

(Aug 2015 - Sept 2015)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116

காணிக்கை ரூ.5/-

# உள்ளுறை

[இந்த ஆவணி மாதத்தில் வளர்பிறையில் வரும் சதுர்த்தி நாள் விநாயகர் சதுர்த்தி என்று வழிபடப் படுவதால்; **மெய்யான இந்துமத**த்தை விளக்கி அருளிய குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் எழுதியுள்ள வரலாற்றுச் செய்திகளை இந்த இதழில் தருகின்றோம்.]

1. **விநாயகர் = பிள்ளையார் ≠ கணபதி.**
2. **விநாயகர் - விக்னேசுவரர் - கணபதி - பிள்ளையார்.**
3. **பிள்ளையார் விநாயகர் கணபதி வழிபாடு, வணக்கம்.**
4. **பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி.**



கருகுலத்தில் எழுந்தருளும் போர்க்கால, போர்க்கோல பிள்ளையார், சித்தி, புத்தி.

# <u>விஞயகர்</u> = <u>பிள்ளேயார்</u> ≠ <u>கணபதி</u>

*('ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்' அவர்களின் நினைவிலும், ஏட்டிலும் உள்ள குறிப்புக்களிலிருந்து சிலவற்றை ஆராய்ச்சிக்கும், சிந்திப்பதற்கும் தருகின்றோம்.)*

பதினெண்சித்தர்களின் இந்துமதப்படி,

விஞயகர் = வினேயின் நாயகர் = வினேகளின் தலேவர் = செயல்கள் அனேத்துக்கும் ஆரம்பமானவர்;

பிள்ளேயார் = பிள்ளே + யார்

= பதினெண்சித்தர்களின் ஆராய்ச்சிச் சோதனேகளால் சாதிக்கப்பட்ட சாதனேகளிலேயே பிள்ளேயார் அனேவருடைய கேள்விக்கும் ஐயத்துக்கும் உரியவராஞர்.

இன்றைக்கு நாட்டு நடப்பில் **மனித உடலும் யானேத்தலேயும்** உடைய பிள்ளேயார், விஞயகர் வணங்கப்படுவதுதான் இயல்பாகவும், சிறப்பாகவும் இருக்கின்றன. ஆஞல், **மனிதத் தலேயும், யானே உடம்பும்** உடைய கணபதி பற்றி யாரும் தெரிந்து கொள்ளவே இல்லே. இதைப்பற்றி மறையாக, குருபாரம்பரியச் செவிவழிச் செய்தியாக எண்ணற்ற செய்திகள் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் <u>இந்துமதத்தின் தந்தை, அல்லது இந்துமதத்தின் கரு, குரு, தரு, திரு, மூலம், அஞதி, ஆதி, ... என்பன அனேத்துக்கும் உரியவர்கள் பதினெண்சித்தர்களே</u> என்ற பேருண்மை நிலேநாட்டப்பட்டு வருகிறது.

எனவேதான், கணபதி, விஞயகர், பிள்ளேயார் என்ற மூன்று சொற்களுக்கு இடையேயும் உள்ள பேருண்மைகளே இதுவரை வெளிப்படையாக விளக்கிடாமலேயே இருந்து வருகிருர்கள் பதினெண்சித்தர்கள்.

மனித உடம்பில் பிற உயிரினங்களின் தலேயைப் பொருத்தியும்; பிற உயிரினங்களின் உடம்பில் மனிதத் தலேயைப் பொருத்தியும் பதினெண்சித்தர்கள் நிகழ்த்திய அறுவை மருத்துவ ஆராய்ச்சியின்

முடிவுகளால்தான் இந்துமதக் கடவுள்களின் பட்டியலில் மனித உடலோடு கூடிய பல்வேறு வகையான உயிரினங்களின் தலையையும், பல்வேறு உயிரினங்களின் உடம்பில் மனிதத் தலையையும் உடைய வழிபடு நிலையினர் இருக்கின்றனர். இதுபற்றி, பதினெண்சித்தர்கள் எழுதியுள்ள மருத்துவ நூல்களில் அரிய செய்திகள் நிறைய இருக்கின்றன.

இன்றைய நிலையில் இந்துமதம் யாரால்? எப்பொழுது? ஏன்? எப்படி? எதற்காக? எங்கே தோற்றுவிக்கப்பட்டது? யாருக்குச் சொந்தம்? எந்த மொழிக்குச் சொந்தம்?... என்ற வினாக்களுக்கு எல்லாம் விடையே இல்லை என்பது போன்ற ஆரிய மாயைகள் தோன்றிவிட்டன. எனவேதான், அவசர அவசியம் கருதி கணக்கற்ற கோடி ஆண்டுகளாகக் கணபதி பற்றியும், விநாயகர், பிள்ளையார் பற்றியும் இரகசியமாகக் காக்கப்பட்டு வரும் உலகளாவியப் பேருண்மைகளில் மின்னல் கீற்றுக்கள் போல் ஒரு சிலவற்றை மட்டும் வெளியிட முன்வருகின்றோம்.

அனாதிக் காலம் தொட்டு பிள்ளையார், விநாயகர், கணபதி என்பவர்கள் அருளாட்சி நாயக நிலையில் இருக்கிறார்கள் என்பதே குருபாரம்பரிய வாசகம்.

பிள்ளையார், விநாயகர் என்ற இரண்டு பெயர்ச் சொற்களும், மனித உடலும் யானைத் தலையும் உடைய கடவுளைக் குறிக்கும். கணபதி என்ற பெயர் மனிதத் தலையும், யானை உடலும் உடைய கடவுளைக் குறிக்கும்.

சித்தர்களின் நூல்களிலும், அநுபூதிமான்களின் வாக்குகளிலும், குருபாரம்பரிய வாசகங்களிலும் மேற்படி பிள்ளையார், விநாயகர் கடவுள்களும், கணபதி கடவுளும் 1) 6 வயது, 2) 12 வயது, 3) 18 வயது, 4) 27 வயது, 5) 32 வயது, 6) 36 வயது, 7) 48 வயது, 8) 64 வயது, 9) 81 வயது, 10) 96 வயது, 11) 108 வயது, 12) 120 வயது என்று பன்னிரண்டு பருவநிலை கடவுளர்கள் இருப்பதாகத் தெளிவான செய்திகள் இருக்கின்றன.

**எனவே, ஆரியர்களுடைய கற்பனைப்படி, எதிர்பாராமல் பரமசிவனின் மனைவி பார்வதி உண்டாக்கிய சிறுவனுடைய தலையை வெட்டி விட்டு, யானையின் தலையை வைத்து உண்டாக்கப்பட்ட திடீர் கடவுளல்ல மேற்படி பிள்ளையார், விநாயகர், கணபதி எனப்படுவோர்.**

வடஆரியர்கள் பிள்ளையார், விநாயகர் என்ற கடவுளையும், கணபதி என்ற கடவுளையும் ஒன்றாகக் கருதும் மாபெரும் தவறைச் செய்வதோடு; இவர்கள் இரண்டு பேர்களும் ஆண் கடவுள்கள் என்று மட்டுமே நினைக்கின்றார்கள். சித்திநிலை பெற்ற ஆண், பெண் இருபாலாருமே பிள்ளையாராக, விநாயகராக, கணபதியாக வாழ்ந்து மறைந்து பெருநிலை எய்தியுள்ளனர். இந்த உண்மையை உணராத ஆரியர்களுக்கு பத்தி, சத்தி, சித்தி, முத்தி, சித்து விளையாடல் எனும் ஐந்து நிலைகளில் எந்தவொரு நிலையும் வெற்றி பெற முடியாததாகவே இருந்து வருகிறது.

"பிள்ளையார் = விநாயகர் மற்றும் கணபதி என்ற கடவுளுக்கும் பெண் வடிவங்கள், அதாவது சத்தி வடிவங்கள் உண்டு! அவர்களின் வயது, வடிவம், பெயர் முதலியவைகள் குருவழியாகத் தெரிந்து கொள்ளக் கூடிய **மறைகள்** (இரகசியங்கள்). இவற்றைத் தெரிந்து கொள்ள முடியாத காரணத்தினால்தான் வடஆரியர்கள் 'பதினெண்சித்தர்கள்' படைத்த எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் தங்களுடைய ***செத்துப் போன சமசுக்கிருத மொழி***யில் பூசை செய்யும் முறைகளை உண்டாக்கி; தங்களைப் போல் பிறரும் பூசையால் எள்முனையளவு கூடப் பயனடைய முடியாமல் செய்து விட்டார்கள். இதன் முழு விளக்கத்தை பதினெண்சித்தர் பீடாதிபதிகளாலும், அவர்களின் வாரிசுகளாலும்தான் உணர, உணர்த்த முடியும். எனவே, இந்தப் பெண் பிள்ளையார்களையும், விநாயகர்களையும், கணபதிகளையும் புத்துயிர்ப்புச் செய்தால் போதும், வடஆரியர்களின் கொட்டம் அடங்கி விடும் ....." அமராவதியாற்றங்கரைக் கருவூராரின் வாசகம். **இது போன்ற அருளுலக இருள் அகற்றுதலே உண்மையான சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும்.**

பதினெண்சித்தர்கள் **மனிதத் தலையும், யானை உடம்பும் உடைய கணபதி** தனது சத்தியை எப்பொழுதும் தனது வலது தொடையின் மீது அமர்த்தி நாளோலக்கத்தில் அமர்ந்திருப்பார் என்றும்; இவரே **'வல்லப கணபதி'** என்றும்; இவரே பல தேவ அசுரப் போர்களைச் செய்து முடித்தார் என்றும்; இவர் பல சிவன்களாலும், திருமால்களாலும், பிறமண்களாலும், இந்திரர்களாலும் வழிபடப் பட்டார் என்றும் குறிக்கின்றனர். [எனவே, *'வல்லபை கணபதி'* பற்றி தற்காலத்துக் கூறும் கருத்துத் தவறானதே.]

பதினெண்சித்தர்கள் ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் **கணபதி**க்குரிய புத்துயிர்ப்பு நாளாக, பிறப்பு நாளாக, அருளாட்சி நாளாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, தற்போது **வழக்கத்தில் கொண்டாடும் நன்னாள் கணபதி சதுர்த்தியே அன்றி, விநாயகர் சதுர்த்தி அல்ல**! இதேபோல், சித்திரை மாத வளர்பிறைச் சதுர்த்தி நாளை பிள்ளையாருக்கு புத்துயிர்ப்பு நாளாக, பிறப்பு நாளாக, அருளாட்சி நாளாக அறிவித்திருக்கிறார்கள்.

இவற்றைப் போல தை மாத வளர்பிறைச் சதுர்த்தி நன்னாளை விநாயகருக்கு உரிய புத்துயிர்ப்பு நன்னாளாக அறிவித்திருக்கிறார்கள். **இது பற்றிய தெளிவான குறிப்புக்கள் கிடைக்க வில்லை**.

"..... யானைத் தலையும், மனித உடம்பும் உடைய பிள்ளையார் சமணர்களாலும், புத்தர்களாலும் கூட வழிபடப் படுகிறார். இந்த சமண, புத்த மதங்களின் செல்வாக்குடைய திபெத், பர்மா, சாவா (Jawa), இந்தோ-சீனா, சப்பான் (Japan) முதலிய நாடுகளில் எல்லாம் பிள்ளையார் வழிபடப் படுகிறார். ஆனால், இவர்கள் பிள்ளையார் வேறு, கணபதி வேறு, ... என்று பிரித்துணர முடியாமல் வழிபடுவதால் உரிய பயனைப் பெற முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இது வடஆரியரின் சூழ்ச்சியாலும், சதியாலும், வஞ்சகத்தாலும், செத்துப்போன சமசுக்கிருதத்தாலும் விளைந்த விளைவேயாகும். **வடஆரியர்களின் பேரழிவில்தான் இந்துமத மறுமலர்ச்சியும், அருளுலகின் இருளகற்றப் படுதலும், மதத் துறையின் ஏமாற்றுக்கள்**

**அகற்றப்படுதலும் நிகழ்ந்திட முடியும்** என்பதால்தான், வடஆரியர்களை எதிர்க்கும் பணிகள் நிதானத்துடனும், கூர்மையுடனும், நேர்மையுடனும் நிகழ்த்தப் படுகின்றன.

ஆதிகாலத்தில் அதாவது கிரேதாயுகத்தில் வாழ்ந்த சிவபெருமான்களில் ஒரு சிவபெருமான் திரிபுரம் எரிக்கச் சென்ற பொழுது கணபதியை வழிபட்டு விட்டுச் செல்லவில்லை என்பதற்காக அக்கால கணபதி சிவபெருமானின் தேர்ச் சக்கரத்தை முறித்துப் பாடம் புகட்டித் தன்னை வழிபடும் படிச் செய்தார் என்பதால்; இந்தக் கணபதி சிவபெருமானும் வணங்கி வழிபாடு செய்யுமளவுக்கு பேராற்றல் படைத்த கடவுளாக இருப்பவர் என்ற பேருண்மை விளங்குகிறது.

அனாதிக் காலத்தில் அதாவது கிரேதாயுகத்திற்கு முன்பு வாழ்ந்த சிவபெருமான்களில் ஒரு சிவபெருமான் தாந்தரீக, ஏந்தரீக, மாந்தரீகப் பூசைகள் பற்றிய பேருண்மைகளை வேதங்களாக வழங்கிய பொழுது ஒரு விநாயகர் அவர் அருகில் உட்கார்ந்து பொறுப்போடும், பொறுமையோடும் அனைத்தையும் எழுதி முடித்தார் என்ற குறிப்பு குருபாரம்பரியத்தில் காணப் படுகின்றது. ஆனால், இவர் கணபதியா? விநாயகரா? பிள்ளையாரா? என்று வேறுபடுத்தி உணர முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் இவர் ஆண் தெய்வமா? பெண் தெய்வமா? என்று கூடத் தெரியவில்லை.

மேற்படி நிகழ்ச்சி போல், துவாபர யுகத்தில் வியாசர் பாரத கால நிகழ்ச்சிகளை உடனிருந்து கண்டு வெதும்பி, அழுது, புலம்பி, அரற்றிக் கொண்டிருந்த பொழுது, அக்காலத்தின் புகழ் பெற்ற மருத்துவரும், அரசாங்க மருத்துவரும், சித்தர் கருவூரார் வழி வந்தவருமான **தன்வந்திரி** அவர்கள் **வியாசரைத்** தனது உணர்வுகளை யெல்லாம் அப்படியே உரைநடை கலந்த கவிதை வடிவில் கூறுமாறும்; அப்படிக் கூறியவற்றைத் தனது மந்திற வலிமையினால் வரவழைத்த பிள்ளையாரைக் கொண்டு ஏட்டில் எழுதுமாறும் செய்தார் என்றொரு குருபாரம்பரியச் செய்தி இருக்கின்றது. இதனைக் கொண்டுதான், பாரத காலத்து வியாசர் கூற அவற்றை ஏட்டில் எழுதிய

பிள்ளையார் நல்ல பொறுப்புணர்ச்சியும், பொறுமையுணர்ச்சியும் உடைய ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ண வேண்டியிருக்கின்றது.

பாரதகால வியாசர் கூறப் பிள்ளையார் **__தமிழில்__** எழுதிய கதைகளையும், புராணங்களையும்; புறநானூற்றுப் பாடல்களின் காலத்துக்குரிய சங்ககாலத் தமிழ்ப் புலவரான ஒரு வியாசர், தமக்குத் தெரிந்த *__சமசுக்கிருத மொழியில்__* மொழி பெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பு மிகவும் சுருங்கியதாகவும், நிறைய பிழைகளை உடையதாகவும், குறைகளையும், தவறான தத்துவங்களையும் உடையதாகவும், வடஆரியருக்குரிய அண்டப் புளுகுகளையும், ஆகாசப் பொய்களையும், ஆபாசக் கற்பனைகளையும், மூடக் கருத்துக்களையும் கொண்டதாகவும் இருக்கின்றது.

பதினெண்சித்தர்களின் நூல்களிலும், குருபாரம்பரிய வாசகங்களிலும் இரண்டு, மூன்று, நான்கு, .... முகங்களை உடைய பிள்ளையார், விநாயகர், கணபதி உருவங்களைப் பற்றிய குறிப்புகள் பல இருக்கின்றன. மேற்படி உருவங்கள் கருவறை மூலவர்களாகவும், கோயில் துணை மூலவர்களாகவும் குறிப்பிடப் படுகிறார்கள். மேற்படி மூவருக்கும் சிங்கம், புலி, ஆடு, மயில், கழுகு, காக்கை, ஆமை, தவளை, ... முதலியவை வாகனங்களாகக் குறிக்கப் படுகின்றன என்ற கருத்து எமது நினைவில் இருக்கின்றது.

மேற்படி மூவர் பற்றிய செய்திகள் மறைந்து விடக் கூடாது என்ற அவசரத்தாலும், அவசியத்தாலும் இக் கட்டுரையைத் தயாரித்துள்ளோம். இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. இவற்றை நன்கு சிந்தித்து மேலும் ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிப்படும். மேற்கண்டவைகளே எம்மிடம் உள்ள செய்திகள், குறிப்புகள்.

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**

***//__ஆதாரம்__:*** 'குருதேவர்' அச்சிட்ட அறிக்கைகள் 12, 13, 14 மற்றும் 15.***//***

# விநாயகர் - விக்னேசுவரர் - கணபதி - பிள்ளையார்

## ஞாலகுரு

*(வடஆரிய மாயையாலும், பிறமண்ணினர்கள் செய்த குழப்பங்களாலும்; பிள்ளையாரும் கணபதியும் ஒன்றே என அனைவரும் எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில் கணபதி பற்றியும், பிள்ளையார் பற்றியும் நாட்டு வழக்கில் உள்ள செய்திகளைக் கொண்டு குருதேவர் தரும் சில விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன.)*

1. **காணபதம்:** கணபதியையே பரம்பொருளாக வழிபடும் மதம்; காணபதர்கள் இவர்கள்.

(அ) கணபதி மூலாதார சத்தி உருவினர்.

(ஆ) பிறணவம் என்ற ஓங்கார வடிவத்தையே குறிக்கும்.

2. **கணபதி** என்ற பெயருக்குத் தத்துவ விளக்கம்.

I. (அ) க = மனோ வாக்குகள்; மனநிலை, வாக்குநிலை.

(ஆ) ண = இவை கடந்த நிலை.

இவ்விரண்டு நிலைகளுக்கும் தலைவனாக 'ஈசனாக' இருப்பவரே 'கணேசன்'.

II. **கணபதி**.

(அ) க - அறிவு.

(ஆ) ண - வீடு.

இவ்விரண்டால் அறிவுக்கும், வீட்டுக்கும் (அருளுக்கும்) தலைவன் (பதி) கணபதி.

3. <u>**வக்கிரதுண்டர்**</u> - கொடிய மாயைகளைத் துண்டிப்பவர் - கேடுகளைத் தடுத்து அகற்றி நலமளிப்பவர்.

4. <u>**இலம்ப உதரர்**</u> - பெரிய வயிறர். அதாவது அனைத்து வகையான பிரபஞ்சங்களையும் தனது வயிற்றுள் அடக்கியிருப்பவர்.

5. <u>**கணபதி உண்ணும் கொழுக்கட்டை**</u> (*மோதகம்*): இது கணபதியின் அன்பிற்குரியவராகின்றவர்கள் இனிய சுவையுடைய இன்ப வாழ்வை பெறுவர் என்பதைக் குறிக்கும்.

6. <u>**கணபதியின் வாகனமான மூஞ்சூறு**</u> (*மூசிகம்*):

<u>இதன் பொருள்</u>:- நமக்குள் இருந்து நம்மை அழிக்கும் திருட்டுத் தனமான, கள்ளத்தனமான, மாயமான பேராசையெனும் உலகப் பற்றுகும். இதனை அடக்கிக் காப்பவரே கணபதி.

7. (அ) *கணபதி* என எண்ணப்படும் பிள்ளையார் தமிழகத்தில் திருமணமாகாதவர், பிறம்மச்சாரி என்று குறிக்கப் படுகிறார். ஆனால், அவருக்கு சித்தி, புத்தி என்று இரண்டு மனைவிகள் உண்டு. இவர் *சத்தி கணேசன்* என்றும் அழைக்கப் படுகின்றார்.

(ஆ) கணபதி வல்லபை என்ற ஒரே ஒரு மனைவியோடு பீடத்தில் அமர்ந்திருப்பார். அவரது மடி மேல் வல்லபை அமர்ந்திருப்பார் என்பதால் இவருக்கு *வல்லபை கணபதி* என்று பெயர். கணபதிக்கு *சேமம், இலாபம்*; அதாவது **நலம், ஈட்டம்** அல்லது **சுகம், வருவாய்** என்ற பெயரில் இரண்டு மகன்கள் உண்டு.

8. (அ) தென்னாட்டில் சித்தி புத்தி பிள்ளயார் ஆலயங்கள் பல உள்ளன. இவை பிள்ளையாருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்பதனை விளக்குகின்றன.

(ஆ) <u>தஞ்சை திருவாலமலையில் உள்ள கோயிலில் *சத்தி கணேசர்* என்று பெயரிடப் பட்டுத் தனிப் பீடத்தில் அமர்ந்திருக்க சித்தி, புத்தி என்ற இரண்டு மனைவிகள் தனித்தனி பீடங்களில் நிற்கின்றனர்.</u> இந்த மூன்று சிலைகளும் ஒன்றாக வைத்துத்தான்

வழிபடப் படுகின்றன. எனவே பிள்ளையாருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்பது விளங்குகிறது.

9. இது தவிர ஐந்து தலை கொண்டு சிங்கத்தின் மேல் விளங்கும் *ஏரம்ப கணபதி, பால கணபதி, ஊர்த்துவ கணபதி* முதலிய மூர்த்திகளும் (அதாவது சிலைகளும்) உண்டு.

10. இராகவ பட்டர் என்பவர் தமது '*சாரதா திலகம்*' என்ற நூலில், சத்திகள் ஐம்பத்தோரு வகை என்பதால் *கணபதி*யும், ஐம்பத்தோரு வகைப்படும் என்று குறிக்கிறார். இருந்தாலும், *சந்தான கணபதி, சுவர்ண கணபதி, நவநீத கணபதி, அரித்ரா கணபதி, மகா கணபதி, உச்சிட்ட கணபதி* என்ற அறுவரில் *மகா கணபதியும், உச்சிட்ட கணபதியும்* வழிபடப் படுகிறார்கள்.

11. கணபதியின் பூசைக்குரிய ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் பிள்ளையார் சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, கணபதி சதுர்த்தி என்ற மூன்று சதுர்த்திகள் கொண்டாடப் படுகின்றன. இவை பற்றி சித்தர்களின் வரலாறுகள் பல உள்ளன. அவற்றில் நாட்டின் தேவைக்கும், பயனுக்கும் ஏற்பவே **'பிள்ளையார் = விநாயகர் ≠ கணபதி'** என்ற கட்டுரையில் வெளியிட்டிருக்கிறோம். பொருளாதார வசதி இருந்தால் பெரிய புத்தகங்களாக வெளியிடலாம்.

12. பதினெண்சித்தர்கள் படைத்த **மெய்யான இந்து மதம்** உலக நாகரிகங்களுக்கும், பண்பாடுகளுக்கும் மூலமாக, முதலாக, கருவாக, தோற்றுவாயாக, தாயாக இருக்கின்ற ஒன்று என்ற பேருண்மையை இந்தப் **பிள்ளையார் சிலை** உலகம் முழுதும் புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் தோண்டியெடுக்கப் படுவதன் மூலம் அறியலாம். குறிப்பாக சப்பான், சீனு, இந்தோ-சீனு, சாவா, சுமத்திரா, பார்மோசா, பர்மா, திபெத், மலேசியா, தாய்லாந்து, இலங்கை, .... முதலிய பல நாடுகளில் மிகமிகத் தொன்மையான வழிபாட்டு நிலையங்களில் எல்லாம் இந்தப் **பிள்ளையார்** சிலை இடம் பெற்றிருக்கிறது.

ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, எகிப்து, பாபிலோனியா, கிரேக்கம், மத்திய அமெரிக்கா, பிரான்சு, செர்மனி, ..... முதலிய மேலை நாடுகளில் உள்ள அருவுருவ பீடக் கருவறைகளில் எல்லாம் **அருவுருவ வடிவினரான விநாயகரின் சிலைகளே** உள்ளன. விநாயகர் எனப்படும் முக்கோணப் பீடம்தான் சிலுவையின் வடிவமாக மேலை நாடுகளில் வணங்கப் படுவதாக ஒரு குறிப்பு இருக்கிறது. அதாவது

வினை + நாயகன் = விநாயகன்

என்பதால் சமுதாயத்தில் நல்வினை, அல்வினை செய்து தண்டிக்கப் பட வேண்டியவர்கள் வினையின் தலைவர்கள், வினையின் நாயகர்கள் என்ற நிலையில் மாண்டிடும் தூக்கு மேடை, கொலைக்களம்; சிலுவை என்ற வடிவில் உருவாக்கப் பட்டது. இந்தச் சிலுவையே சொசுதிக் சின்னமாக அதாவது பிள்ளையார் சுழியாக ( உ ) இன்றைக்கும் இந்துமதத்தில் சிறப்பாகப் போற்றப் படுகிறது. இந்து மதத்தில் மிகவும் புனிதமாகக் கருதப் படும் இந்த சொசுதிக் சின்னம்தான் சிலுவைச் (✞) சின்னமாக வளர்ச்சி பெற்றது என்று சித்தர்கள் நூல்கள் கூறுகின்றன.

**குறிப்பு**:- வேகமாக எழுதும் போது 'உ' என்று போட்டு அதன் குறுக்கே ஒரு கோடு போடுவதுதான் இன்றைக்கும் மரபாக இருக்கிறது. இந்தக் கூட்டல் (+ Plus Mark) குறிதான் சற்று அழகு படுத்தப் பட்டு; சொசுதிக் சின்னமாக ( 卐 ) காலப் போக்கில் வாழ்ந்தது என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்திற்கு முன்பே கருத்து நிலவியதாகக் குருபாரம்பரியச் செய்தி கூறுகின்றது.

**சிறப்புக் குறிப்பு**:- இசுரேல் நாட்டு தேவகுமாரன் ஏசுநாதரின் மரணத்திற்கு முன்பே சிலுவைச் சின்னம் (The Cross Symbol) மதிப்புக்கும் வழிபாட்டுக்கும் உரிய ஒன்றாகவே உலகெங்கும் கருதப் பட்டிருக்கிறது. ஏனெனில், இலிங்கத்தின் வரைபடமாகத் தோன்றியதுதான் சிலுவைக் குறி அல்லது சிலுவைச் சின்னம்.

**சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் "...... இலிங்கம், சிவலிங்கம், சத்திலிங்கம் என்பனவற்றின் சுருக்க விளக்கக் குறிப்பு; அல்லது கருத்து விளக்கக் குறிப்பு, அல்லது வரைகோட்டுப் படம், மாதிரிப் படம்தான் சிலுவைக் குறி அல்லது சிலுவைச் சின்னம் ....." என்று குறிக்கின்றார்.** ("The sketch or the cross-sectional view of the Ilinga, Sivalinga and Sathilinga is just the form of the Cross" - His Holiness Siddhar Kaakkaiyar, Mr M.Palanisamy Pillai.)

"இந்து மதத்தில் நான்கு யுகங்களாகவே **<u>சந்தேகத்துக்குரிய குற்றவாளி</u>**யை

1. சுண்ணும்புக் காளவாயில் வைத்து எரிப்பது,
2. கழுத்து வரை தரையில் புதைத்து யானையை விட்டு தலையை மிதிக்கச் சொல்லுவது,
3. கருங்கல்லின் மீது படுக்க வைத்து சங்கிலியால் கட்டிக் கடலுக்குள் போடுவது;
4. கொடிய நஞ்சைக் கொடுத்துப் பருகச் சொல்லுவது;
5. சிலுவையில் அடித்து சாகும் வரை சிலுவையிலேயே தொங்க விடுவது

என்ற ஐந்து விதமான தண்டனை வழங்கும் முறை இருந்து இருக்கிறது. இதுவே **'ஐந்திறத் தண்டனை'** என்று **'நமச்சிவாய விளக்கம்'** என்ற தலைப்பில் குருபாரம்பரியத்தில் குறிக்கப் படுகிறது.

எனவே **<u>சந்தேகப் பட்டவர்களை சிலுவையில் வைத்து அடித்து கொல்லப் படுவது இந்துமத மரபே</u>**யாகும். இந்த சந்தேகங்களையெல்லாம் அகற்றி நல்ல தெளிவைக் கொடுக்கக் கூடியவர் வினையின் நாயகர் விநாயகர்தான். எனவேதான் விநாயகர் சிலையின் பின்னாலும், படத்தின் பின்னாலும் சிலுவைக் குறியோ அல்லது அதன் சுருங்கிய வடிவமான சொசுதிக் சின்னமோ குறிக்கப் படுவது மரபாயிற்று.

“ஆவி, ஆன்மா, ஆருயிர் இம்மூன்றையும் குறிக்கும் இலிங்கச் சின்னம் இந்துமதத்தின் முழுமுதற் பொருளான சிவபெருமானை குறிக்க நேரிட்டு விட்டது. எனவேதான், முதல் யுகத்தில் (கிரேதாயுகம்) வாழ்ந்த பல சிவபெருமான்களில் ஒரு சிவபெருமானின் மகனாகத் தோன்றிய பிள்ளையாரை இலிங்கச் சின்னத்தோடு சேர்த்தே சிலையாக வடிப்பது, ஓவியமாகத் தீட்டுவது என்ற மரபு தோன்றி விட்டது. அதுவே காலப் போக்கில் இலிங்கச் சின்னம் அல்லது ஓவியம் வரைந்து அதற்கு முன்னால் பிள்ளையார் படம் அல்லது சிலை வைக்கும் பழக்கம் தோன்றி விட்டது.

“அதாவது, ‘இலிங்க வடிவிலிருக்கும் சிவபெருமானின் மகனே பிள்ளையார்’ என்ற மாபெரும் கருத்தை விளக்குவதற்காகவே பிள்ளையார் படத்திற்குப் பின்னால் இலிங்க வடிவப் படமும், பிள்ளையார் சிலைக்குப் பின்னால் இலிங்கச் சிலையும் இடம் பெறும் மரபு தோன்றி விட்டது. இந்த இலிங்க வடிவமே சுருக்க வடிவமாகச் சிலுவை (The Cross Symbol) வடிவமாகவும், சொசுதிக் சின்னமாகவும் (Swasthik Symbol) வடிவம் பெற்றன. அதாவது, இந்தச் சிலுவைக் குறியே சுருங்கி சொசுதிக் சின்னமான பிறகு பிள்ளையார் சுழியாக மாறி விட்டது.

“எனவேதான், பிள்ளையார் சுழி போடாமல் யாருமே எதையுமே எழுதத் தொடங்குவதில்லை என்ற மரபும், நம்பிக்கையும் வேரூன்றி விட்டது. ஏனெனில், இந்த பிள்ளையார் சுழி பிள்ளையாரையும் குறிக்கிறது; பிள்ளையாரின் தந்தையான சிவபெருமானையும் குறிக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக சீவன் எனப்படும் ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றின் நினைவும் இந்தப் பிள்ளையார் சுழியில் அடங்கி உள்ளது. எனவேதான், இந்தப் பிள்ளையார் சுழி மிகப் பெரிய மதிப்பையும் முதன்மையையும் பெற்று விட்டது” - என்று கருவூரூர் வழி வந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் குறிக்கின்றார்.

கணபதியைப் பற்றியும், விநாயகர் பற்றியும் *1. விநாயக புராணம், 2. கணேச கல்பம், 3. கணேச சார சந்திரிகை, 4. கணேச கீதை, 5. கணேச தந்தி, 6. கணேச காண்டம், 7. கணபதி உபநிடதம்,* (கணபதி இனே நிடதம், கணபதி துனே நிடதம்), *8. கேசம்ப உபநிடதம், 9. கணேச புராணம்* என்ற நூல்கள் விரித்துரைக்கின்றன.

இந்து மதத்திலிருந்துதான் சமண மதமும் (சைண மதம்), புத்த மதமும் (பௌத்த மதம்) தோன்றின என்பதற்கு சான்றாகவும், ஊன்றாகவும் விளங்குவது இந்தப் பிள்ளையார் சிலையும், பிள்ளையார் வழிபாடும்தான். அதாவது சமணர்களும், புத்தர்களும் பிள்ளையார் சிலையை தங்களுடைய அனைத்துக் கோயில்களிலும் வைத்துப் போற்றுகிறார்கள். தங்களுடைய அனைத்து வழிபாட்டிலும் பிள்ளையாரை முதன்மையான பங்கு பெறச் செய்கிறார்கள்.

[“..... The religious importance given to the idol of the god Pillaiyaar and His worship is the best proof and evidence of the fact that the Jainism and Buddhism are the daughters of the Induism” - Taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai.]

முதல் யுகமான கிரேதாயுகத்திற்கு முன்பு இந்துமதம் தோற்றுவிக்கப் படுவதற்குரிய சூழல்கள் உருவாக்கப் பட்ட காலத்தில் (The Pre-Indu-Historic Age), அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டிற்கு முன்னால் தோராயமாக சில ஆண்டுக் கால இடைவெளியில் **விண்வெளியிலுள்ள அண்டபேரண்டங்களிலிருந்து வந்த <u>பல சிவபெருமான்களில் ஒருவர்</u>** தமது மகனை யானைத் தலையை உடைய பிள்ளையாராகவும்; அந்தத் தலையிழந்த யானையை மனிதத் தலையையுடைய கணபதியாகவும் மாற்றினார்.

[<u>குறிப்பு</u>:- இந்த மனிதத் தலையும் யானை உடலும் உடைய கணபதியின் சிலைகள் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. தற்பொழுதும் இந்தக் **<u>கணபதியின்</u>**

<u>**சிலை ஒன்று திருச்செங்கட்டாங்குடி**</u> என்ற இடத்தில் உள்ளது. மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கிராமியக் கோயில்களில் இச்சிலை காணப்படுகிறது. அதுவும் பாழடைந்த பழங்கோயில்களில்தான் காணப்படுகிறது.]

இப்படி இவர் யானைத் தலையை உடைய பிள்ளையாரை உருவாக்கித்தான் தமது 1. தந்தர, 2. தந்திற, 3. தந்திர, 4. தாந்தர, 5. தாந்தரீக, 6. மந்தர, 7. மந்திற, 8. மந்திர, 9. மாந்தர, 10. மாந்தரீக, 11. எந்தர, 12. எந்திற, 13. எந்திர, 14. ஏந்தர, 15. ஏந்தரீக, 16. சித்த, 17. தவ, 18. வேள்வி எனும் 18 வகையான பூசைக்குரிய நூல்களை எழுதினார். அதாவது, இவர் சொல்ல இவரது மகனான பிள்ளையார் எழுதினார். [நூல்கள் = பூசைமொழிகள், பூசைவிதிகள், பூசை மரபுகள், பூசைப் படிகள், பூசை மறைகள், பூசை முறைகள், பூசை நெறிகள், பூசை வேதங்கள், ... என்று 18 வகைப்படும்.]

இந்த கிரேதாயுகத்துச் சிவபெருமானைப் பின்பற்றியே மூன்றாவது யுகமான துவாபர யுகத்தில் தோன்றிய சித்தர் கருவூரார் வழி தோன்றிய 18 வியாசர்களும்; தங்களுடைய சித்தி நிலைக்குப் பிறகு தவம் செய்து யானைத் தலையையுடைய பிள்ளையாரை வரவழைத்து அவருடன் கூட்டாகச் சேர்ந்து 18 புராணங்களையும் எழுதினார்கள்.

இந்தப் பிள்ளையார் சிற்பங்கள் பல வகைக் கோலங்களில் அமர்ந்தும், நின்றும், நடனமாடியும், தவழ்ந்தும், படுத்தும் இருக்கும் நிலைகளில் உருவாக்கப் பட்டிருப்பது; இந்து மதத்தில் பிள்ளையாருக்கு எத்தகைய முதன்மையும், மேன்மையும் இருந்திட்டன என்பதின் விளக்கமேயாகும்.

பிள்ளையார் என்பது ஐந்து வகைப் பிள்ளையாராகவே வழக்காற்றில் சிறப்பாக வடிவமைப்பு பெற்று போற்றப் பட்டது. அதாவது **'நமசிவாய'** என்ற சிவபெருமானின் திருமந்திரத்தில் உள்ள ஐந்து எழுத்துக்களுக்கேற்ப ஐந்து வகைப் பிள்ளையார்கள் படைக்கப்

பட்டன. ஆனால், காலப் போக்கில் [அதாவது எந்த யுகத்தில் என்று தெரியவில்லை], ஐந்து வகைப் பிள்ளையார்களும்; ஆறுபடை வீடுகளிலிருந்த முருகன் சிலைகளை, அதாவது வடிவமைப்புகளை ஒன்றுக்கி ஆறு தலைகளையுடைய முருகன் சிலைகள் உண்டாக்கப் பட்டது போல்; இந்த ஐந்து வகைப்பட்ட பிள்ளையார்களையும் (ந + ம + சி + வா + ய] ஒன்றுக்குவதற்காக ஒரு புதிய வடிவம்; அதாவது ஐந்து தலையுடைய சிலை உருவாக்கப் பட்டது. இதுதான் பிள்ளையார் வழிபாட்டிலேயே மிகப் பெரிய புரட்சியைச் செய்தது என்று கபாடபுரத்துக் கருவூரார் வழங்கிய குறிப்பு எனப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் குறிக்கின்றார்.

//**ஆதாரம்**:- குருதேவர் அறிக்கைகள் 26, 27, 28 ஆகியவைகளில் தொடர் கட்டுரையாக வந்தவை.//

## பிள்ளையார், விநயகர், கணபதி வணக்கம்

ஐந்து கரத்தானை; யானை முகத்தானை
இந்தின் இளம்பிறை; போலும் எயிற்றானை
நந்தி மகன்தனை; ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி; போற்றுகின்றேனே.

## பிள்ளையார், விநயகர், கணபதி வழிபாடு

முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையார் சேகரனே!
தற்பரனே! நின் தாள் சரண்.

# பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி

**[பிள்ளையார், கணபதி, விஞயகர் காயந்திரி]**

அஞதிக் காலத்திற்கும் முற்பட்ட காலக்கட்டத்தில் அண்டபேரண்டங்களிலிருந்து வந்திருந்த பதினெண் சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள்...... முதலியவர்களால் இம்மண்ணுலகில் நந்திதேவன் என்பவருடைய மகனைக் கொண்டு உருவாக்கப்பட்ட கடவுளரே பிள்ளையார், கணபதி, விஞயகர் என்ற மும்மூர்த்திகளாக விளங்குகின்றனர்.

இவர்களுக்கான படையல் பொருட்கள் காலப் போக்கில் மாறி வந்திருக்கின்றன. ஆரம்பக் காலத்தில் பழவகைகள் படைக்கப்பட்டன. பின்னர் காலப் போக்கில் நாகரீக வளர்ச்சிக்கேற்பப் பச்சரிசி, வெல்லம், எள், ஏலக்காய், தேங்காய் முதலியவை கலந்த '**காப்பரிசி**' (தங்களைக் காப்பாற்றுவதற்காகப் படைக்கப்படும் படையல் என்பதால் இது காப்பரிசி என்று பெயர் பெற்றது) படைத்தனர். அதன்பிறகே, வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப சுண்டல் (புழுக்கல்), கொழுக்கட்டை, மாவிளக்கு, மற்றப் பணியாரங்கள் படைக்கும் மரபு தோன்றிற்று.

இவர் சிறந்த காத்தற் கடவுள் என்பதால் குட்டியும், குனிந்தும், தொப்பைக் கரணமிட்டும் மிகுந்த பணிவோடு நிதானமாகக் கும்பிட வேண்டும் என்பது மரபு.

# <u>பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்தரம்</u>

1. ஓம் காயந் திரிந்து, ஆவியான்மா ஆருயிர் ஒன்ருகிடுக!
2. பிள்ளேயார், கணபதி, விஞயகர் மனேவியரோடு ஏந்தருளுக!
3. ஓம ஓக! யாக யக்ஞ! வேள்வித் தீயே! மூலாதாரப் பிறணவமாகுக!
4. சித்தி புத்தி! அத்தி முத்தி! வல்லபையாம் தீமை தீய்க்கும் தீயே!
5. இருளகற்றுக! இன்னல் தவிர்த்திடுக! அருள்நலம் வழங்கிடுக!

# <u>பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்திரம்</u>

1. பிள்ளேயாரே! கணபதியே! விஞயகரே! மூலாதாரச் சத்தியே!
2. ஞானப் பிறவியே! மோனப் பொருளே! வானவர் போற்றும் அமுதே!
3. மனேவியர் பதினேவரோடு வாழும் பிறணவப் பீடமே!
4. குருதிப் பொறியல், குடல் தலேக்கறி, கொழுக்கட்டை, புழுக்கல், கடலேயவுல் பொறி;
5. விரும்பியன படைக்கிறேம்! நலம் நல்குக! அருள் வழங்குக! சித்திகளளித்திடுக!

# பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்திரம்

1. ஓம் யானைத்தலை மனிதவுடலுற்று யாரிந்தப் பிள்ளை யென்றுனவரே!
2. ஓம் மனிதத்தலை யானையுடலுற்றுக் கணங்களின் தலைவரான கணபதியே!
3. ஓம் வினைகளின் நாயகராய் அருவுருவாய் ஐம்பூதமாளும் விஞயகரே!
4. தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக!
5. ஓகபோக!, மோகதாக!, வேகவெறிகள்!, வென்றுய் வுயர்வு பெறச் செய்வீராகுக!

# பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி தோத்தரம்

1. மந்திற, தந்திற, எந்திற, மூலச் சுருதியே! போற்றி!
2. ஆரண, ஆகம, மீமாம்சை விளக்கமே! போற்றி!
3. அத்திற, சாத்திற, சூத்திற, நேத்திறப் பொருளே! போற்றி!
4. நேம, நியம, நிடத, நிட்டைத் தத்துவமே! போற்றி!
5. பிள்ளையாரே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
6. கணபதியே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
7. விஞயகரே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
8. சிவக்குமரா! பார்வதி பாலகா! முருகச் சோதரா! போற்றி!
9. கணநாதனே! நாதாந்த நந்தி மகனே! சித்தர் சித்தியே! போற்றி!

10. ஐந்தெழுத்தே! அறுகோணமே! முக்கோணப்பீடமே! எண்கோண உயிரே வருக! வருக! வருக!
11. அகந்தையகன்றிட, ஆணவமடங்கிட, கன்மம் தொலேந்திட, அருளுக! அருளுக! அருளுக!

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி தோத்திரம்

1. இருடியே! கணநாதனே! இசைத்தலேவனே! வசையொழிக்கும் வல்லவனே!
2. ஓங்காரத் துதிக்கையனே! ஒற்றைக் கொம்பனே! நாற்கையனே! பானேவயிறனே! பிள்ளேயாரே!
3. மானுடத் தலேயனே! யானேக்கால் நாலுடையவனே! யானே வயிறும் வாலுமுடையவனே! கணபதியே!
4. முக்கோண வடிவே! ஐங்கோணப் பொருளே! அறுகோண ஆற்றலே! எண்கோணப் பீடமே! விஜேயின் நாயகனே! விஞயகா!
5. ஆறுகுளம் கால்வாய் ஏரி முச்சந்தி நாற்சந்தி வழிபடுநிலேய முன்றில் வாழும் மூலமே!
6. தொடக்கத்தின் தொடக்கமே! ஆரம்பத்தின் ஆரம்பமே! முயற்சியின் முயற்சியே! மூலத்தின் மூலமே! கலேகளின் விளேவே!
7. இருடிவேதமே! அசுரவேதமே! சாமவேதமே! அதர்வான வேதமே! வேதப் பொருளே!
8. வானே! ஆகாயமே! விண்ணே! விண்கடந்த பெருவெளியே!
9. பிண்டமே! அண்டப்பிண்டமே! பேரண்டப்பிண்டமே! அண்டபேரண்டப் பிண்டமே!

10. மலரொடு நெய்யில் வெந்தவை ஏத்திடும் படையலாகியதை ஏற்றுப் போற்றுக!
11. எண்ணி வேண்டுவன நிறைவேற அருளும் பராசக்திக் குமரா போற்றி!
12. அருளாடாமல் மருளாடாமல் விரும்புபவர் அகத்தே நடனமிடும் அருட்பெருஞ்சுடரே போற்றி!
13. குட்டியும் குனிந்தும் தொப்பைக் கரணமிட்டும் முட்டி மடித்த பூசை விருப்பனே போற்றி!
14. அகரமே போற்றி! உகரமே போற்றி! ஐகாரமே போற்றி! ஓங்காரமே போற்றி! மகரமே போற்றி!
15. போற்றுபவர் பேணும் பிள்ளையாரே போற்றி! கணபதியே போற்றி! விநயகா போற்றி!
16. நிலமே போற்றி! பூமியே போற்றி! மண்ணே போற்றி! நீளாவி ஆன்மா ஆருயிரே போற்றி!
17. தீயவை தீய்த்திடுக! மாயங்கள் மாய்த்திடுக! அயர்வுகள் அகற்றிடுக! இயலாமை விரட்டிடுக! பொல்லாமை போக்கிடுக!
18. நலம் வழங்குக! வளம் வளர்த்திடுக! வலிமை காத்திடுக! வாழ்வின் துணையாகிடுக! வணங்கிப் போற்றுகிறோம்!

---

//**இதன் மூலம்:** "மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி" என்ற புத்தகம்.//

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**<u>பிறப்பிடம்</u>:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**<u>காலம்</u>:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**<u>மொழி</u>:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**<u>வழிபாட்டு நிலையம்</u>:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**<u>இந்துமத நூல்கள்</u>:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**<u>இந்துமதப் பயன்கள்</u>: தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது <u>முன்னோர் வழிபாடு</u>, <u>மூத்தோர் வழி நடத்தல்</u>.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*<u>**ஆதாரம்:**</u> மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய**
**11வது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவர்,**
**சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் அவர்கள்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்களின் **குருவாணைப்படி** இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**